DENP/2020/Gr.9/Geo/1stT/T-I,II/Model-1

**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்குமாகாணம்**

**முதலாம் தவணைப்பரீட்சை – 2020**

**(மாதிரி வினாத்தாள்-1)**

**தரம் - 9** **புவியியல் I,II** **இரண்டு மணித்தியாலம்**

சுட்டெண்:.......................

## புவியியல் I

- கீழே தரப்பட்டுள்ள 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களிற்கு மிகப் பொருத்தமான **விடையின் கீழ் கோடிடுக**

1)உலகில் மிகப் பெரிய மலைத் தொடரான இமயமலையில் அமைந்துள்ள மிக உயரமான மலைச் சிகரம் எது?

1.எவரஸ்ட் 2.தவளகிரி 3.அன்னபூர்ணா 4.மகாலு

2)ஆசியாக் கண்டத்திற்கு உரித்தான தீவுகளை மட்டும் சரியாகக் கொண்டமைந்திருப்பது.

1.இலங்கை,பிரித்தானியா 2.மாலைதீவு,தாய்வான்
3.மாலைதீவு, ஐஸ்லாந்து 4.யப்பான்,நியூசிலாந்து

3)ஆசியாவின் நிலப்பகுதியிலே கடல் மட்டத்தினை விட மிகத் தாழ்வாக அமைந்துள்ள நீர்ப் பகுதி எது?

1.செங்கடல் 2.ஏரல்கடல் 3.கஸ்ப்பியன்கடல் 4.சாக்கடல்

4)உலகிலே அதிகூடிய மழைவீழ்ச்சி பெறுகின்ற இடம் அமைந்திருப்பது இந்தியாவின் எந்தப் பகுதியிலாகும்.

1.வட்டவளை 2.சென்னை 3.சிராப்பூஞ்சி 4.கோபி

5)சென்ற ஆண்டு கொரோனா என்ற வைரசின் பாதிப்பு முதன் முதலில் கண்டறியப்பட்ட இடம் எது?

1.வுகான் 2.பிஜிங் 3.கொங்கொங் 4.இத்தாலி

6)ஆசியாக்கண்டத்திற்கு வெளியே அமைந்துள்ள புராதன நாகரிகங்களில் ஒன்றாக அமைவது.

1.மொசப்பத்தேமியா 2.குவாங்கோ 3.சிந்துவெளி 4.எகிப்து

kalvi.lk

7)ஆசியாக்கண்டத்தில் மிகப்பெரியதாக அமைந்துள்ள யாங்சி நதியானது எந்த சமுத்திரத்துடன் கலக்கின்றது.?

1.பசுபிக்சமுத்திரம் 2.இந்துசமுத்திரம்

3.அத்திலாந்திக்சமுத்திரம் 4.ஆட்டிக்சமுத்திரம்

8)ஆசியாக் கண்டத்திற்கு உரித்தான அயனப் பருவக்காற்றுக் காலநிலை நிலவும் நாடு எது?

1.யப்பான் 2.பங்களாதேஸ் 3.சீனா 4.இலங்கை

9)பாகிஸ்தானின் 'காரிப்' பருவத்தில் பயிரிடப்படும் பயிர் வகைகளுள் ஒன்று.

1.சோளம் 2.ஓட்ஸ் 3.நெல் 4.பார்லி

10) உலகிலே 'மொங்கலோய்ட்' இன மக்கள் மிக அதிகமாக வாழும் நாடு எது?

1.இந்தியா 2.பாகிஸ்தான் 3.சீனா 4.இலங்கை

11) ஆசியாவிலே கைத்தொழிலை பிரதான பொருளாதாரமாகக் கொண்ட நாடு எது?

1.யப்பான் 2.பங்களாதேஸ் 3.சீனா 4.இலங்கை

12) ஐக்கிய அரபு எமிரேட் நாட்டில் அமைவு பெற்றுள்ள மாநிலம் எது?

1.'அல்ஜெசீரா' 2.'பக்தாத்' 3. 'டுபாய்' 4.'சிரியா'

13) CNN என்னும் சர்வதேச தொடர்பாடல் சேவையை வழங்கும் நிறுவனம் அமைந்துள்ள இடம் எது?

1.டுபாய் 2.குவைத் 3.இந்தியா 4.சீனா

14) உலகில் மிக உயரத்தில் அமைந்துள்ள மேட்டுநிலங்களுள் ஒன்றாக அமைவது எது?

1.தக்கணம் 2.திபெத் 3.ஈரான் 4.மொங்கோலியா

15) இலங்கையில் அதிகளவு நீரேந்து பகுதியை உள்ளடக்கியுள்ள மிக நீளமான நதி எது?

1.மகாவலிகங்கை 2.மல்வத்துஓயா 3.களனிகங்கை 4.மாணிக்ககங்கை

16) வடகீழ் பருவக்காற்றின் மூலம் இலங்கைக்கு அதிகளவு மழைவீழ்ச்சி கிடைக்கும் காலம் எது?

1.மே தொடக்கம் செப்ரெம்பர் 2.டிசம்பர்தொடக்கம் பெப்ரவரி

3.நவம்பர்,டிசம்பர் 4.மார்ச்,ஏப்ரல்

kalvi.lk

17) அயனஈரக்காடுகளின் பெரும்பகுதி இலங்கையில் அமைவு பெற்ற காலநிலை வலயம் எது?

1.தாழ்நில ஈரவலயம் 2.தாழ்நில உலர்வலயம்

3.மலைநாட்டு ஈரவலயம் 4.மலைநாட்டு உலர்வலயம்

18) இலங்கை முழுவதும் 1:50,000 அளவுத்திட்டத்தில் எத்தனை மெற்றிக் படங்களாக தயாரிக்கப்பட்டுள்ளது?

1.72 2.71 3.92 4.82

19) இலங்கையில் எந்த மாவட்டத்தில் அதிகளவு மக்கள் மிகச் செறிவாக வாழ்கின்றனர்.

1.முல்லைத்தீவு 2.கம்பகா 3.கொழும்பு 4.மொனராகலை

20) இலங்கையில் அமைந்துள்ள மிக உயரமான நிலத்திணிவு எது?

1.சிவனொளிபாதமலை 2.நமுனகுலமலை

3.நக்கிள்ஸ்மலை 4.பீதுறுதாலகாலமலை

(20x2=40 புள்ளிகள்)

## புவியியல் II

- **முதலாம் வினா கட்டாயமானது**
- மேலும் **நான்கு** வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களிற்கு **விடை தருக.**

1.

**A.**

i. முதலாம் தவணையில் புவியியல் பாடத்தில் உம்மால் நிறைவேற்றப்பட்ட கணிப்பீட்டு வகை ஒன்று தருக? (2புள்ளி)

ii. கணிப்பீட்டுக்காக உம்மால் தகவல்கள் பெறப்பட்ட மூலங்கள் இரண்டு தருக? (2புள்ளி)

iii. உம்மால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டினால் நீர் பெற்றுக் கொண்ட நன்மை இரண்டு தருக? (2புள்ளி)

**B.**

i. கீழே தரப்பட்ட ஆசியப் படத்தில் குறித்துக் காட்டப்பட்ட இலக்கங் களுக்குரிய இடங்களின் பெயரை பொருத்தமான வெற்றிடத்தில் எழுதுக.

a. கஸ்ப்பியன்கடல் (…..)

b. தக்கணமேட்டுநிலம் (…..)


c. சுமாத்திராத்தீவு (…..)

d. யூரல்மலை (…..)

e. குவாங்கோநதி (…..)

f. மொங்கோலியா (…..)

(6புள்ளி)




Education
கல்வி
අධ්‍යාපන

2.

i. ஆசியாக் கண்டத்தில் உள்ள சமவெளிகள் மூன்றின் பெயர் தருக? (3புள்ளி)

ii. ஆசியாக் கண்டத்தின் சார்பு அமைவிடத்தைத் தருக? (4புள்ளி)

iii. ஆசியப் பிரதேசத்தின் சிறப்பம்சங்கள் ஐந்து தருக? (5புள்ளி)

3.

i. ஆசியாவின் பிரதான காலநிலை வலயங்கள் மூன்றின் பெயர் தருக? (3புள்ளி)

ii. ஆசியாவிலுள்ள அயனமழைக் காடுகளின் சிறப்பியல்புகள் நான்கு தருக? (4புள்ளி)

iii. ஆசியாவில் அதிக சனத்தொகை அடர்த்தி மிக்க மூன்று வலயங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் சனத்தொகை அடர்த்தி மிகையாக இருப்பதற்கான காரணம் ஒன்றைக் குறிப்பிட்டு விளக்குக? (5புள்ளி)

4.

i.யப்பான் நாட்டின் பிரதான மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனங்கள் மூன்று தருக? (3புள்ளி)

ii. யப்பானின் பிரதான உற்பத்திக் கைத்தொழில்கள் நான்கு தருக? (4புள்ளி)

iii. ஆசியாவின் சேவைமையம் ஒன்றைக் குறிப்பிட்டு அங்கு சேவைத்துறை விருத்தி பெற்றமைக்கான காரணம் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக? (5புள்ளி)

5.

i. இலங்கையின் தரைத்தோற்றப் பிரிவுகள் மூன்றையும் தருக? (3புள்ளி)

ii. மேலே நீர் குறிப்பிட்ட தரைத்தோற்றப்பிரிவு ஒன்றின் விசேட அம்சங்கள் நான்கு தருக?(4புள்ளி)

iii. இலங்கைக்கு கிடைக்கும் மழைவீச்சிகளைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றின் சிறப்பியல்பை விளக்குக? (5புள்ளி)

6.

i. இலங்கையின் வெப்பநிலை மாறுபாட்டில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று காரணிகளைத் தருக? (3புள்ளி)

ii. இலங்கையின் தாழ்நில ஈரவலயக் காலநிலையின் பண்புகள் நான்கு தருக? (4புள்ளி)

iii. என்றும் பசுமையான உலர் கலப்புக்காடுகளின் பண்புகள் ஐந்து தருக? (5புள்ளி)

7.

i. இடவிளக்கப்படத்தில் நீர்நிலைகள்,நிர்வாகஎல்லைகள்,நெல்வயல்கள் என்பன எந்த வர்ணங்களில் காட்டப்பட்டிருக்கும் என்பதை முறையே தருக? (3புள்ளி)

ii. 1:50,000 இடவிளக்கப்படத்தில் அவதானிக்கக்கூடிய பௌதிக அம்சம் நான்கு தருக (4புள்ளி)

iii. இலங்கையின் 1:50,000 இடவிளக்கப்படங்களில் பயன்படுத்தப்படும் பின்வரும் வழக்கக் குறியீடுகளை உரிய வர்ணத்துடன் வரைக.

a. பாடசாலை

b. வைத்தியசாலை

c. மாவட்டஎல்லை

d. பௌத்தகோயில்

e. சிறுவீதி

(5புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457